**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.**
**(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்),**
**தொலைபேசி: 044-29515590**

**ஆணை நாள் 01.07.2026**

**முன்னிலை**
**திரு அ. விஜயராம், எம்.ஏ., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*********

**வழக்கு எண். CP 2824/H/2024**

**திரு ச.ரமணகாந்தன்** — **மேல்முறையீட்டாளர்**

***/எதிர்/***

**பொதுத் தகவல் அலுவலர்/**
**கண்காணிப்பாளர்**
**மண்டலம் 2** — **பொது அதிகார அமைப்பு**
**வேலூர் மாநகராட்சி**
**வேலூர் மாவட்டம்.**

**கோரிய தகவல்:** மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 13.02.2024 அன்று தாக்கல் செய்துள்ள மனுவில் மக்களுடன் முதல்வர் திட்ட மனு எண். 6696452 ன் நகல் மற்றும் வேலூர் வட்டாட்சியருக்கு அனுப்பிய கடிதத்தின் நகல் வழங்கக் கோரி மனு தாக்கல் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல் திருப்தியில்லை எனத் தெரிவித்து, மேல்முறையீட்டாளரால் 07.06.204 அன்று தாக்கல் செய்யப்பட்ட புகார் மனுவானது இன்று (01.07.2026) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு ச.ரமணகாந்தன் இன்று விசாரணைக்கு ஆஜரானார். |
| பொதுத் தகவல் அலுவலர் | பொதுத் தகவல் அலுவலர் திரு. G. அமர்நாத், கண்காணிப்பாளர் அவர்கள் விசாரணைக்கு நேரில் ஆஜரானார். |

**ஆணை**

இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் 22.02.2024 மற்றும் 10.11.2025 தேதியிட்டக் கடிதங்களின் வாயிலாக தகவல்கள் வழங்கியுள்ளதாகத் தெரிவித்து அதற்குண்டான ஆவண நகலினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

2. இன்றைய விசாரணையில் ஆஜரான மேல்முறையீட்டாளர் பொது தகவல் அலுவலர் அவர்கள் இனம் 1ல் தான் கோரிய தனது மனுவின் நகல் தனக்கு வழங்கப்படவில்லை என தனது வாதத்தை எடுத்துரைத்தார்.

3. இன்றைய விசாரணையின் முடிவில், இரு தரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

- மனுதாரர் தான் அளித்த மனுவின் நகலை திரும்பப் பெறுவதற்கு வழிவகை இல்லை என மனுதாரருக்கு இவ்வாணையம் அறிவுறுத்துகிறது.
- மேலும், தகவல்களை பொறுத்தமட்டில் பொது தகவல் அலுவலர் வழங்கியுள்ள தகவல்கள் போதுமானதாக இவ்வாணையம் கருதி இவ்வழக்கு முற்றாக்கம் செய்யப்படுகிறது.

ஒம்/- (அ. விஜயராம்)
மாநில தகவல் ஆணையர்

//ஆணையத்தின் ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

வழக்கு எண். CP 2824/H/2024
பெறுநர்
பொது அதிகார அமைப்பு

பொதுத் தகவல் அலுவலர்/
கண்காணிப்பாளர்
மண்டலம் 2, வேலூர் மாநகராட்சி
வேலூர் மாவட்டம்.

மேல்முறையீட்டாளர்

திரு ச.ரமணகாந்தன்
த/பெ.(லேட்) சி.சண்முகம்
422/2 பேங்க்மேன் காலனி
அலமேலுமங்காபுரம்
வேலூர் 9.

Copy to : File
VM/PA